# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES P.W.6 (L.W.3)
## SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Antony Raja |
| Father Name | : | |
| Occupation | : | Head Constable, Chennai( மாவட்ட குற்ற ஆவண காப்பக பிரிவு) |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.11.2025

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 12.00 p.m**

**எதிரிகள் 1 மற்றும் 2 தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் சாராய ரெய்டுக்கு 23.03.2006 ஆம் தேதி போனேன். நாங்கள் சாராய வேட்டைக்கு போவதற்கு விரிஞ்சிபுரம் காவல் துணை கண்காணிப்பாளர் கூறி போனோம். எழுத்து மூலமாக எதுவும் தகவல் வரவில்லை. வாய்மொழி மூலமாக தான் வந்தது. நாங்கள் 10 பேர் சென்றோம். முதலாவது வேலூர் தாலூக்கா காவல் நிலையம் சென்றோம். அப்போது மணி 03.00 லிருந்து 03.30 மணி இருக்கும். அதன் பிறகு காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்றோம். அங்கு செல்லும்போது சுமார் 04.00 லிருந்து 04.30 மணி இருக்கும். அதன் பிறகு விளக்கி கூறினார்கள்.

பின்னர் சிவநாதபுரம் கையிலாய மலை திப்பை என்ற இடத்திற்கு சென்றோம். TN 23 0394 Eicher வாகனத்தில் சென்றோம். நாங்கள் 10 பேர் அந்த வண்டியில் போனோம். விரிஞ்சிபுரம் ஆய்வாளரும் வேலூர் ஆய்வாளரும் தனித்தனியாக அவர்கள் வாகனத்தில் வந்தார்கள். காவல் துணை கண்காணிப்பாளர் தனியாக அவருடைய வாகனத்தில் ஓட்டுனருடன் வந்தார். நாங்கள் வாகனத்தை சிவநாதபுரத்தில் நிறுத்திவிட்டோம்.நாங்கள் அனைவரும்

சீருடையில் தான் இருந்தோம்.

விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திலிருந்து சிவநாதபுரம் சுமார் 20 கிமீ இருக்கும். எவ்வளவு நேரத்தில் சென்றோம் என்றால் சுமார் 01.00 மணியிலிருந்து 01.30 மணி நேரம் ஆனது. சிவநாதபுரத்தில் நாங்கள் வாகனத்தை நிறுத்திய இடத்திலிருந்து கையிலாய மலை திப்பை எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் காட்டு பாதைதான், சுமார் 4 லிருந்து 5 கிமீ இருக்கும். நடந்து தான் போனோம். அது கல், முள் உள்ள பாதை. காட்டு பாதை கல், முள் இருப்பதால் அவ்வளவு சீக்கரமாக நடந்து செல்ல முடியாது என்றால் சரிதான்.

நாங்கள் வாகனத்தை நிறுத்திய இடத்திலிருந்து பார்க்கும்போது அங்கு ஆள் நடமாட்டம் இருந்ததா என்றால் நாங்கள் போகும் போது இல்லை. 5 கிமீ சுமார் 1 மணிநேரத்திற்குள் நடந்து சென்றோம். அங்கு நடந்து போகும்போதும் வேறு எந்த ஆள் நடமாட்டமும் தெரியவில்லை.

நாங்கள் அனைவரும் சீருடையில் போனதால் அங்கிருந்த நபர்கள் காட்டிற்குள் ஓடிவிட்டார்கள். அங்கு சாராயம் விற்று கொண்டிருந்தார்கள். அதில் சடையன் என்பவர் துப்பாக்கி எடுத்து வந்து பொழப்ப கெடுக்க வந்துட்டாங்க தெவிடியா பசங்க என்று சொல்லி இவர்களை சுட்ட தான் அடங்குவாங்க என்று சொல்லி சுட்டார். அவர் தான் சடையன் என்று எனக்கு ஏற்கனவே பரீட்சயமானவரா என்றால் இல்லை அதற்கு பின்னர் தான் தெரியும். அங்கு சாராயம் விற்கிறார்கள் என்று யார் தகவல் சொன்னது என்றால் எனக்கு தெரியாது. மேல் இடத்திலிருந்து கேட்டு கொண்டதால் நாங்கள் சாராய வேட்டைக்கு சென்றோம்.

அந்த துப்பாக்கி நாட்டு துப்பாக்கி வகை ஆகும். அந்த 2 துப்பாக்கியும் ஒரே அளவு கொண்டதா என்றால் 1 பெரியதாகவும் 1 சற்று குறைவானதாகவும் இருக்கும். நீளத்தை தவிர்த்து துப்பாக்கியில் உள்ள வேறு எந்த அடையாளத்தை நான் பார்க்கவில்லை. கையில் கத்தி, அரிவாள் வைத்திருந்தார்கள். என்ன வகையான கத்தி என்றால் குத்து கத்தி. சமார் 3/4 அடி இருக்கும். சாராயம்

பாக்கெட்டு போட்டு மூட்டையில் இருந்தது. எவ்வளவு சாராயம் இருந்தது என்று நான் பார்க்கவில்லை.

வேறு எதுவும் பார்க்கவில்லை. துப்பாக்கி, கத்தி, சாராயம் அனைத்தையும் யார் எடுத்து வந்தது என்றால் எங்களுடன் வந்த காவலர்கள் தான் எடுத்து வந்தார்கள். எடுத்து வந்து எங்கள் வாகனத்தில் வைத்தார்கள். அதன் பிறகு என்னையும், சுடப்பட்ட நபரையும், அடிப்பட்ட காவல் ஆய்வாளர் சீனிவாசன் அவர்களையும் நேராக அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் சொல்லிவிட்டு கொண்டு வந்து சேர்த்தார்கள்.

அதன்பிறகு போலீசார் என்னை அடுக்கம்பாறை மருத்துவமனையில் விசாரித்தார்கள். அதை தவிர்த்து என்னை வேறு எந்த விசாரணையும் செய்யவில்லை. என் உயர் அதிகாரி காட்டு பகுதியில் ஆடு மேய்த்து கொண்டிருந்தவர்களில் ஒருவரை தவறுதலாக சுட்டு விட்டார் என்றாலும் அதிலிருந்து தப்பிப்பதற்கு சாராயம் விற்றதாகவும் துப்பாக்கியால் சுட்டதாகவும், எங்கள் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நாட்டு துப்பாக்கி என்பதால் அதற்கான உரிமம் இல்லை. உரிமம் இல்லாததால் அந்த துப்பாக்கி யாருடையது என்று சொல்ல முடியாது. நாங்கள் புள்ள விவர கண்க்கிற்காக சாராய வேட்டைக்கு போனோம் என்றாலும் அந்த இடத்தில் தவறுதலாக துப்பாக்கியால் சுட்டு விட்டார்கள் என்றாலும் எனவே அவருக்கு ஆதரவாக இந்த வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

துப்பாக்கி, கத்தி, சாராயம் ஆகியவைகள் வழக்கிற்காக எங்கள் உயர் அதிகாரியால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்: 12.20 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.11.07 18:52:37 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்